
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1134

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

47

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# ‘தடா’ எதிர்ப்புப் பேரணியில் தாக்குதல்!



1991-ஆம் ஆண்டு, முதலமைச்சராக ஜெயலலிதா அம்மையார் பொறுப்பேற்றதும், கழக ஆட்சியில் உள்துறைச் செயலாளராக இருந்த நாகராஜன் ஐ.ஏ.எஸ். அவர்கள், கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டதுடன், பதவியிலிருந்து இடைநீக்கமும் செய்யப்பட்டார். அவர் ஜாமீனில் வெளி வந்தபோது, மீண்டும் அவரை ‘தடா’ சட்டத்தில் கைதுசெய்து, கலைஞருக்கு எதிராக வாக்குமூலம் வாங்கும் பணிகள் தொடங்கின.

இந்த கைது தொடர்பாகவும் அந்த ஆட்சி தொடர்பாகவும் ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிட்டுள்ள கலைஞர். “தடா சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு சொல்லப்பட்ட நோக்கத்துக்கு மாறாக, முதன்முதலாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின்மீது அந்த ‘தடா’ சட்டத்தைப் பிரயோகித்தவரும் ஜெயலலிதாதான் என்பதை நினைத்துப் பார்த்தாலே, 1991 முதல் 1996-ஆம் ஆண்டு வரையிலான அவரது ஆட்சி, எந்த வகையில் நடந்திருக்கும் என்பதை எவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்” என விளக்குகிறார்.

1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி, திருச்சி நீதிமன்றத்தில் அவர் வாக்குமூலம் அளிக்கையில், அரசியல் விளையாட்டில், தான் ஒரு பகடைக்காயாக ஆக்கப்பட்டிருப்பதாக வாக்குமூலம் அளித்திருந்தார். அதன்பின்னர், 27-ஆம் தேதி, அவர் சென்னைக்கு ‘தடா’ வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதாகக் கூறி, அங்கேயே வைத்திருந்தனர். பின்னர் நவம்பர் 30-ஆம் தேதி, நீதிமன்ற விடுமுறை நாளில், அவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், பல அதிரடி நடவடிக்கைகள் தொடங்கின. அங்கிருந்து மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்ட அவர், அங்கு செய்தியாளர்களைச் சந்திக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. கலைஞருக்கு எதிராக, கழகத்தினருக்கு எதிராக, நாகராஜனிடம் வாக்குமூலம் பெற்றதன் அடிப்படையில், இவையெல்லாம் நடந்தன. “உடல்நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட அதிகாரி, அதுவும் ‘தடா’ கைதியாக இருக்கும் அதிகாரி, எப்படி செய்தியாளர்களை அழைத்து, பேட்டி கொடுக்க முடியும்? என அன்றைக்கு பத்திரிகைகள் எழுதின.

அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில், சில நாட்களில் கழகத்தைச் சேர்ந்த சுப்புலட்சுமி ஜெகதீசன், அவரின் கணவர் ஜெகதீசன் ஆகியோர் ‘தடா’ சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு, மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டனர். கோவை மாவட்டத்தில், ஒன்றியச் செயலாளராக இருந்த தளி மாரிமுத்து கைதுசெய்யப்பட்டார். கழகத்தினர் தவிர, அன்றைக்கு ஈழ ஆதரவாளர்கள் என அறியப்பட்ட பலரும் ‘தடா’ சட்டத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

அதே காலகட்டத்தில், ‘காவிரி நீர் பங்கீடு’ தொடர்பாக, தமிழ்நாட்டுக்கு கர்நாடகா ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டும் என ‘காவிரி நடுவர் மன்றம்’ அளித்த இடைக்காலத் தீர்ப்பினை அரசிதழில் ஒன்றிய அரசு வெளியிட்டது.

அதையடுத்து, கர்நாடகாவில் தமிழர்கள்மீது தாக்குதல்கள் நடைபெறத் தொடங்கி, வன்முறை வெறியாட்டமாக மாறியது. அதற்குக் கண்டனக் கூட்டம் நடத்தத் திட்டமிட்ட கலைஞர், கழக நிர்வாகக் குழுவைக் கூட்டி, தமிழ்நாடு தழுவிய போராட்டங்களை அறிவித்தார்.

நிர்வாகக் குழு முடிவின்படி, 1992-ஆம் ஆண்டு, ஜனவரி 22-ஆம் தேதி, கர்நாடகத் தமிழர் பிரச்சினைக்காக மாநிலம் முழுவதும், அனைத்து ஊர்களிலும் கருப்புக்கொடி ஊர்வலங்கள் நடத்துவதென்றும், ஜனவரி 27-ஆம் தேதி விலைவாசி உயர்வு, பேருந்து, இரயில் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து, ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும், ‘தடா’ சட்ட அதிகார மீறலை எதிர்த்து, பிப்ரவரி 3-ஆம் தேதி மாலை, சென்னையில் ஊர்வலம் நடத்தி, ஆளுநரிடம் முறையீட்டு மனு ஒன்றை அளிப்பது என்றும் அறிவித்தார்.

முதலிரண்டு நிகழ்ச்சிகளும் பல நெருக்கடி களை மீறி நடந்து முடிந்தன. கழகத்தினரின் கட்டுக்கோப்பையும் கடமையுணர்வையும் பொறுத்துக்கொள்ள முடியாத அம்மையார், மூன்றாவது நிகழ்ச்சியைப் பெரும் துயர நிகழ்ச்சியாக மாற்றினார்.

பிப்ரவரி 3-ஆம் தேதி, ஆளுநர் மாளிகை நோக்கி, இலட்சக்கணக்கான கழகத்தினர் பேரணியாக நடக்கத் தொடங்கினர். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில விஷமிகள், ஊர்வலத்தினர்மீது கற்களை வீசி கலகம் செய்யத் தொடங்கினர். ஊர்வலத்தின் முன் பகுதியில் இருந்த கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட தலைவர்கள் ஆளுநர் மாளிகைக்குள் சென்றபோது, சைதாப்பேட்டை நீதிமன்ற வளாகம் அருகே கழகத்தினர்மீது காவல்துறை தாக்குதல் தொடங்கியது. அன்றைய ஆளுங்கட்சி விஷமிகளும் தாக்குதலில் சேர்ந்துகொண்டனர். பலர் காயமடைந்து மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்ட நிலையில், திடீரென்று காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

> அன்றைய ஆளுங்கட்சி விஷமிகளும் தாக்குதலில் சேர்ந்துகொண்டனர். பலர் காயமடைந்து மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்ட நிலையில், திடீரென்று காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

அந்த சம்பவத்தையும் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு பதிவுசெய்கிறார் கலைஞர்.

‘காலாடிப்பேட்டை சேஷகிரி குடியிருப்பைச் சேர்ந்த கிருஷ்ணசாமியின் மகன் ஜெயபாண்டியன் காலில் குண்டு பாய்ந்து, கால் ஒடிந்தது. நெய்வேலி தாண்டவன் குப்பத்தைச் சேர்ந்த ஐயலு என்பவருக்குத் தலையில் குண்டு பாய்ந்தது. துறைமுகம் அன்னை சத்யா குடியிருப்பைச் சேர்ந்த சாமுவேலுக்கு விலா எலும்பு முறிந்தது. கோவை லிங்கேச கவுண்டர் குடியிருப்பைச் சேர்ந்த ராஜாம்பாள் என்பவருக்கு வாய் கிழிந்தது. சென்னை 3-வது வட்டத்தைச் சேர்ந்த தனசேகரனுக்கு, இரண்டு கால்களிலும் குண்டு பாய்ந்தது. கோவை சுந்தரபாளையம் தங்கவேலு என்பவருக்குத் தொடையில் குண்டு பாய்ந்தது.

குண்டடிபட்டு மருத்துவமனையில் இருந்த தனசேகரன், தீவிர சிகிச்சைக்குப் பின்னரும், பிழைக்காமல் மறைந்துவிட்டார்’ என விரிவாகப் பதிவுசெய்துள்ளார்.

கலவரத்துக்குக் காரணம், ‘ஊர்வலத்தினர்மீது கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டதுதான்’ என ஊடகங்கள் எழுதின. ‘தடா’ அடக்குமுறைச் சட்டத்தை ஆட்சியினர் தவறாகப் பயன் படுத்துகின்றனர் என்பதை, ஜனநாயக வழியில் முறையிடச் சென்று பெரும் துயரத்தைச் சந்தித்தது கழகம்.

‘தடா’ நெருக்கடிகளுக்கு எதிராகவும் கழகத் தோழர்கள்மீது நடைபெற்ற தாக்குதலுக்கு எதிராகவும் நீதிமன்றப் படியேறியது கழகம்.

‘முரசொலி’யில் “ஒதியமிலார் அல்ல; உன் வீரம்!” என கலைஞர் எழுதிய கடிதம், கழகத்தினரின் உள்ளத்தைப் படம்பிடித்தது. “உன்னையேன் உருகி உருகி சென்னைப் பேரணிக்கு அழைத்தேன் என்று என்னையே நான் நொந்துகொள்கிறேன் இப்போது!” என மனம் வருந்தி எழுதினாலும், அதில் கழகத்தினர் கண்ணியத்தைப் பெருமைப்படுத்தினார்.

ஆனால், ‘தடா’ எதிர்ப்புப் பேரணியில், தாக்குதல் இலக்கு கலைஞர்தான். “இப்படித்தான் உங்க தலைவனுக்கு தடால் தடால்னு விழும்” என்று, அன்று தாக்குதல் நடத்தியோர் கூறியதை அறியாதவர் அல்ல நம் தலைவர்.

...தொடரும்

## கட்கரியின் மாட்டிறைச்சி வியாபாரம்!

மாட்டிறைச்சி எடுத்துச் சென்றனர், சமைத்தனர், சாப்பிட்டனர் என வட மாநிலங்களில், கடந்த 12 ஆண்டுகளில் மாதத்திற்கு ஒரு முறையாவது ஊடகங்களில் செய்தி வந்துகொண்டுதான் இருக்கிறது. அப்பாவி மக்கள் மாட்டிறைச்சி உண்பதையே பொறுத்துக்கொள்ள முடியாத சங் பரிவார்களுக்கு, அவர்களின் நாக்பூர் நாயகர் நிதின் கட்கரியே அத்தொழிலில் கோடிக்கணக்கில் லாபம் ஈட்டியிருக்கிறார் என்று, குண்டை வீசி அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது The Caravan Magazine.

மார்ச் 1, 2026 தேதியிட்ட இதழில், ‘Nagpur’s Beef’ என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையில், ‘10 மார்ச், 2022 அன்று அதிகாலை 3.30 மணியளவில், மகாராஷ்டிராவின் லோனாவாலா கிராமப்புற காவல் நிலையத்திற்கு ஒரு அநாமதேய அழைப்பு வந்தது. புனே-மும்பை விரைவுச்சாலையில் மாட்டிறைச்சி ஏற்றிச் செல்லும் லாரி ஒன்று வருவதாக அந்த நபர் தெரிவித்தார். மாட்டிறைச்சி விற்பனையை 2015-லேயே தடை செய்துவிட்டது அம்மாநில பா.ஜ.க. அரசு.

அதனால், காவல் துறையினர் அந்த லாரியை (NL01 AB 5853) விரட்டிப் பிடித்து, ஓட்டுநர் மக்னு அஷ்ரபி பாஸ்வான் மற்றும் உதவியாளர் சுபம் சர்மா ஆகியோரைக் கைதுசெய்தனர். அந்த லாரியில், ஹைதராபாத்தில் இருந்து ஏற்றிவரப்பட்ட ரூ.60 லட்சம் மதிப்பிலான மாட்டிறைச்சி இருந்தது. இந்த இறைச்சிக்கு உரிமை கோரி, ரெம்பல் அக்ரோ அண்டு ஃபுட்ஸ் (Rembal Agro and Foods) என்ற நிறுவனம் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது. அது எருமை இறைச்சி என்றும், வியட்நாமிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர்கள் வாதிட்டனர். ஆனால், முறையான ஆவணங்கள் இல்லாததால் நீதிமன்றம் அதை ஏற்கவில்லை.

விசாரணையில், இந்த நிறுவனம் ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியின் முதன்மை நிறுவனமான சியான் அக்ரோ (Cian Agro) உடன் நெருங்கிய தொடர்புடையது என்பது தெரியவந்தது. சியான் அக்ரோவின் நிர்வாக இயக்குநர், நிதின் கட்கரியின் மகன் நிகில் கட்கரி ஆவார். 2020-இல் தொடங்கப்பட்ட ரெம்பல் நிறுவனம், மூன்று ஆண்டுகளில் ரூ.72.56 கோடி வருவாயை ஈட்டியுள்ளது’ என விவரிக்கிறது அக்கட்டுரை.

## ஃப்ளாஷ்பேக்



### ‘எப்போதும் கழகக்காரனாகவே இரு!’



எம்.கருணாநிதி

2007-ஆம் ஆண்டு, நம் இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளின்போது, அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து, அவரிடம் வாழ்த்துப் பெற்ற தருணம். “பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்கவும்; எப்போதும் கழகக்காரனாகவே இருக்கவும்” என்று அவர் வாழ்த்தியது, என்றும் என்னோடு இருக்கும். அந்த சந்திப்பின்போது, மாவட்டப் பிரதிநிதி வ.ராஜாராம் அவர்களும் முன்னாள் வட்டச் செயலாளர் பி.காசி அவர்களும், உடன் வருகை தந்திருந்தனர்.

– எம்.கருணாநிதி,
செய்தித்தாள் விற்பனையாளர் சங்கத் தலைவர்,
வில்லிவாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மலையளவு வாக்கு வித்தியாசம்!

1978-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், தமிழ்நாடு மேலவைக்கு நடைபெற்ற தேர்தலில், ஆளுங்கட்சியின் அதிகார பலத்தை மீறி, கழகம் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர் தொகுதியிலிருந்து தி.மு.க. வேட்பாளர் சங்கரலிங்கம் 4,058 வாக்குகள் பெற்று மாபெரும் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர், 207 வாக்குகள் பெற்று படுதோல்வி அடைந்ததுடன் கட்டுத்தொகையையும் பறிகொடுத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131